©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 48] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 9, 2009
கார்த்திகை 23, திருவள்ளுவர் ஆண்டு – 2040

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**வரைவு அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 100, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G1)த் துறை, நாள்: 28 ஜூலை 2009.]*

தமிழ்நாடு 1985ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தர நிர்ணயம் (செயலாக்கம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1985), 72ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தர நிர்ணய (செயலாக்கம்) விதிகளுக்கு மாநில அரசு செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தம் இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது. மேற்சொன்ன சட்டத்தின் 72ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரக் காலம் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு முன்னர் இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மேற்சொன்ன ஆறுவாரக் கால அளவு முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும். மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, சென்னை 600 006இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு செயலாளர், தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு இரு நகல்களில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 20ஆம் விதியில், (1) துணை விதியின் (a) பகுதிக்குப் பதிலாக பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

“(a) அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகத்தின் அறிவியல் (இயற்பியல் பாடத்தை ஒரு பாடமாக கொண்டு), தொழில்நுட்பம் அல்லது பொறியியல் பட்டதாரி அல்லது மூன்றாண்டுகள் தொழில் அனுபவத்துடன் பொறியியலில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்றிருப்பவர்; மற்றும்’’.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர் (பொறுப்பு),*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**திருத்த அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 152, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, நாள் : 15 அக்டோபர் 2009.]*

1985ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தர நிர்ணய (செயலாக்கம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1985) 72ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மத்திய அரசுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தர நிர்ணய (செயலாக்கம்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 72ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்கீழ் குறிப்பிட்டவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இவ்வாறு செய்யப்பட்ட திருத்தம், **தமிழ்நாடு அரசிதழில்** இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில்,

(1) 14ஆம் விதியைச் சேர்ந்த துணைவிதி (a)இல் நான்காவது வரம்பு நிபந்தனைக்குப் பின்னர் பின்வரும் வரம்பு நிபந்தனைக்கு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

''ஆனால் பிளாஸ்டிக் மற்றும் உருக்குநாடா அளவைகளுக்கு மறுசரிபார்ப்பு தேவையில்லை.''

(2) விவர அட்டவணை 12 இல், ''3 நீட்டல் அளவைகள்'' என்ற தலைப்பின்கீழ், (i) இனம் (b) அதன்கீழ் வரும் பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:—

**"(b) நெகிழ்வுத்தன்மை கொண்டவை**

| | | |
|---|---|---|
| வகை I | : | 20 காசு/மீட்டர் |
| வகை II | : | 15 காசு/மீட்டர் |
| வகை III | : | 10 காசு/மீட்டர்'' |

(iii) (c) மற்றும் (d) இனங்கள் விட்டுவிடப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.